# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## நான்காம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**

## P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றி ற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக** **(15x1=15)**

1. காப்பியம் என்றால் என்ன?
2. சூளாமணி காப்பியத்தின் தலைவன் யார் ?
3. பௌத்த சமயம் சார்ந்த காப்பியம் யாது ?
4. வீரத்தாய் காவியம் எடுத்துரைக்கும் கருத்து யாது?
5. மாங்கனியின் காதலன் யார்?
6. திண்ணனாருக்கு இறைவன் எத்தனை நாட்களில் காட்சி தந்தார்?
7. வாணிதாசன் படைத்த நூல்கள் எத்தனை ?
8. காவியம் என்று பெயர் பெறும் இலக்கியங்களைக் கூறுக?
9. ஆயர் வளர்க்கும் மூவினங்கள் யாவை?
10. சிலம்பு, வெற்பு ஆகிய சொற்களின் பொருள் யாது?
11. வரைவுகடாதல் என்றால் என்ன?
12. வள்ளைப்பாட்டு என்றால் என்ன?
13. 'பெருநீர் அழுவம்' என்பதன் பொருளைத் தருக.

14. மகளின் தங்கையாகத் தாய் எதனைக் கூறுகிறாள்?

15. ' செலவு அழுங்குவித்தல்' என்பதன் பொருள் யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** (5x3=15)

1. இதிகாசம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
2. சிலப்பதிகாரக் காப்பியத்தின் தனிச்சிறப்புகளை எழுதுக.
3. மணிமேகலை ஒரு சமுதாய சீர்திருத்தக் காப்பியம் விளக்குக.
4. பெண்களைப் பற்றி சேனாதிபதியின் கருத்து யாது?
5. முதல் சங்கம் பற்றிக் கூறுக.
6. களவு ஒழுக்கத்தின் வகைகளைக் கூறுக.
7. பொருநர் பாலை யாழை மீட்டிப் பாலைப் பண் பாடும் போது என்ன நிகழும்?
8. கைக்கிளையும் பாடாண் திணையும் குறித்து எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடைதருக.** (3x15=45)

1. (அ) சிலம்பில் வழக்குரை காதையின் முக்கியத்துவத்தை ஆராய்க.

(அல்லது)

(ஆ) இந்திர விழாவின் மாண்புகளை விழாவறை காதை வழி எடுத்துரைக்க.

2. (அ) வீரத்தாயில் பாரதிதாசன் உணர்த்தும் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகளை விளக்கி உரைக்க.

(அல்லது)

(ஆ) பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் பற்றி விவரிக்க

3. (அ) நெய்தல் திணைப் பாடல்களின் முப்பொருள் சிறப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்தும் தமிழர் பண்பாடுகளை மதிப்பிடுக.

****